தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்

செய்தி வெளியீட்டு எண்:93/2026 நாள்:06.08.2026

செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் அறிவிக்கை எண்:04/2026, நாள் 20.05.2026-ன் வாயிலாக நேரடி நியமனத்திற்கு அறிவிக்கை செய்யப்பட்ட ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகளில் (நேர்முகத் தேர்வு அல்லாத பதவிகள்) அடங்கியுள்ள பதவிகளுக்கான கணினி வழித் தேர்வு, ஒளிக்குறி உணரி வகைத் தேர்வு மற்றும் விரிந்துரைக்கும் வகைத் தேர்வு 16.08.2026 மு.ப. முதல் 20.08.2026 மு.ப (ம) பி.ப வரை, 07.09.2026 மு.ப (ம) பி.ப முதல் 12.09.2026 பி.ப வரை மற்றும் 19.08.2026 மு.ப (ம) பி.ப வரை நடைபெற உள்ளது.

தேர்வு எழுத அனுமதிக்கப்பட்ட விண்ணப்பதாரர்களின் தேர்வுக்கூட அனுமதிச்சீட்டு (Hall Ticket) தேர்வாணையத்தின் இணையதளமான www.tnpsc.gov.in மற்றும் www.tnpscexams.in-ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய ஒருமுறை பதிவுதளத்தின் (OTR DASHBOARD) மூலமாக மட்டுமே விண்ணப்ப எண் மற்றும் பிறந்த தேதியை உள்ளீடு செய்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டினை (Hall Ticket) பதிவிறக்கம் செய்துகொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது.

ப. ஸ்ரீ வெங்கட பிரியா, இ.ஆ.ப.,
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்